1978 மார்ச் 18]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் நகராட்சியில் பொதுவாக இருக்கக் கூடிய கக்கூஸ்கள் எல்லாம் மிகவும் சீரழிந்து இருக்கின்றன. இவைகளை எல்லாம் மராமத்து செய்து நல்ல கக்கூஸ்களாக அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அதற்குரிய விவரங்களைத் தெரிவிக்கலாம்.

திரு. இ. தமிழரசன் : நகராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நவீன கக்கூஸ்களை அமைக்க முடியாவிட்டாலும், எல்லா நகராட்சி பகுதிகளிலும் இருக்கின்ற பேருந்து நிலையங்களில் இருக்கின்ற கக்கூஸ்களையாவது நவீன முறையில் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஒவ்வொன்றாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, விஞ்ஞானம் பரவி வருகின்ற இந்த நாளில் மனிதனின் மலத்தை மனிதனே சுமக்கக்கூடிய நிலை இன்னும் நகராட்சிகளில் இருந்து வருகிறது. இந்த நிலையைப் போக்க புதிதாக நகராட்சிப் பகுதிகளில் கட்டிடங்கள் கட்டுவதற்கு வரைபடங்கள் அனுமதிக்காக வரும்போது, கட்டாயமாக நவீன முறையில் கக்கூஸ்கள் கட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையை இதில் சேர்க்க முடியுமா? அதே நேரத்தில் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதற்கேற்ற முறையில் நகராட்சிச் சட்டங்களைத் திருத்தம் செய்ய முடியுமா என்று அரசு முயற்சி செய்து வருகிறது. பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பதை, சேலத்தை நினைவில் வைத்துக் கொண்டு கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்குத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

Warren Road in Madras

*Q. No. 614— Thiru. S. M. VASAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether land assigned for the construction of a road by the Madras Corporation has been appropriated by private parties at Warren Road, Mylapore, Madras;

(b) the steps taken to recover the land; and

(c) the steps taken to lay the road ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) வாரன்சாலை ஏற்கெனவே இருந்து வருகிறது. அதிலிருந்து மேற்கு திசையில் செல்லும் வேறு ஒரு சாலை அமைக்கும் பொறுப்பு சாலையையொட்டியுள்ள நில சொந்தக்காரர்களைச் சேர்ந்தது.

குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம்

*வினா 615—திரு. ஈஸ்வரமூர்த்தி. பி. என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்தின் தலைமையக அலுவலகம் இடம் மாற்றியதால் வாடகை அதிகமாகக் கொடுக்கப் படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், முன்பு கொடுத்த வாடகைக்கும் தற்பொழுது கொடுக்கப்பட்டு வரும் வாடகைக்கும் எவ்வளவு வித்தியாசம்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—

(அ) ஆம்.

(ஆ) மாதம் ஒன்றுக்கு அதிகப்படியாகக் கொடுக்கப் படும் வாடகை ரூ. 30,621.75.

திரு. ஈஸ்வரமூர்த்தி. பி. என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த வாடகையிலிருந்து இவ்வளவு அதிகப்படியாக வாடகை கொடுத்து இதில் குடியேற வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலும் இருந்து வந்த அலுவலகங்களை 16—2—1977ஆம் நாளன்று, ஒரே இடத்திற்குக் கொண்டு வந்ததின் மூலமாக, வாரிய தலைமை அலுவலகம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், இருப்பு தணிக்கை கோட்ட செயல் பொறியாளர் அலுவலகம் இவையெல்லாம் ஒரே இடத்தில் வந்ததின் காரணமாக அதிகமாக வாடகை கொடுத்தாலும், மீதம் அதிகமாயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.